# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

## ஆண்டிறுதிப் பரீட்சை — 2019

தரம்:- 09

**கர்நாடக சங்கீதம்**

நேரம்- 2 மணித்தியாலங்கள்

சுட்டெண்:-

### பகுதி-I

1) **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01) மாத்ருகா பதங்கள் இடம்பெறும் உருப்படி வகை.
1. ஜதீஸ்வரம் 2. கீதம் 3. கீர்த்தனை 4. ஸ்வரஜதி

02) சங்கராபரண இராகத்தின் மேள எண்.
1. 15 2. 22 3. 28 4. 29

03) ஜம்பை தாளத்தின் அங்க அடையாளம்.
1. $1_7 \cup 0$ 2. $1_4 0 0$ 3. $1_4 0 1_4$ 4. $0 1_4$

04) அலங்காரம் அமைக்கப்பட்டுள்ள ஆவர்த்தனங்கள்.
1. 10 2. 8 3. 7 4. 12

05) பாஷாங்க இராகத்திற்கு உதாரணம்.
1. மோகனம் 2. சுத்தசாவேரி 3. பிலஹரி 4. பூபாளம்

06) அப்பியாச வரிசைகளை இயற்றியவர்
1. பாபநாசம் சிவன் 2. ஸ்ரீ புரந்தரதாசர்
3. தஞ்சை பொன்னையாப்பிள்ளை 4. ஸ்வாதித்திருநாள் மகாராஜா

07) பண் புறநீர்மைக்குரிய இராகம்
1. பூபாளம் 2. பந்துவராளி 3. ஆரபி 4. சுத்தசாவேரி

08) சுத்தாங்கமாகப் பாடப்படும் உருப்படி
1. கீதம் 2. கீர்த்தனை 3. தேவாரம் 4. திருவாசகம்

09) கண்டசாபு தாளத்தின் சொற்கட்டு
1. தகிட 2. தகதகிட 3. தகதிமிதகிட 4. தகதிமி

10) ‘பெருமாளே’ என முடிவுறும் உருப்படி வகை.
1. தேவாரம் 2. திருப்புகழ் 3. கீதம் 4. கீர்த்தனை

11) ‘சம்போ மஹாதேவா’ என்ற உருப்படியின் வகை
1. ஜதீஸ்வரம் 2. திவ்யநாம கீர்த்தனை 3. கீர்த்தனை 4. ஸ்வரஜதி

12) திவ்யநாம கீர்த்தனைகளை இயற்றியவர்
1. புரந்தரதாஸர் 2. சியாமாசாஸ்திரி 3. தீட்சிதர் 4. ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள்

13) நடன அரங்கில் இரண்டாவதிடம் பெறும் ஸ்வர பல்லவி என அழைக்கப்படும் உருப்படி
1. கீர்த்தனை 2. பதம் 3. ஜதீஸ்வரம் 4. தில்லானா

14) ஹந்துஸ்தானி இசையில் ‘பைரவதாட்’ என்றழைக்கப்படும் இராகம்.
1. தோடி 2. சங்கராபரணம் 3. மோகனம் 4. மாயாமாளவகௌளை

15) ஜனக இராகங்களின் மொத்த எண்ணிக்கை
1. 4 2. 12 3. 72 4. 16

16) ஸ்ருதி வாத்தியமாகப் பயன்படும் நரம்புக் கருவி
1. வீணை 2. தம்புரா 3. வயலின் 4. சாரங்கி

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

17) இறைவனின் ஐந்து திருமுகங்களையும் உருவகித்து ஆலயங்களில் இசைக்கப்படும் வாத்தியக் கருவி
1. நாதஸ்வரம் 2. தவில் 3. பஞ்சமுக வாத்தியம் 4. கின்னரம்

18) நாட்டார் இசை வழக்கிலிருந்து கும்மி மறைந்துபோகாது. புத்துயிர் அளித்தவர்.
1. கோபாலகிருஷ்ண பாரதியார் 2. பாபநாசம் சிவன் 3. புரந்தரதாஸர் 4. தீட்க்ஷிதர்

19) 'ஆற்றோரம் போற மயில் - அது ஆண் மயிலோ பெண் மயிலோ' இப்பாடல் இடம்பெறுவது.
1. கும்மி 2. கோலாட்டம் 3. கொம்புமுறி 4. கிட்டிப்புள்

20) புரந்தரதாஸரின் காலப்பகுதி
1. 1890 - 1973 2. 1484 - 1564 3. 1875 - 1970 4. 1480 - 1560

(2X20=40புள்ளிகள்)

## பகுதி-II

**நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**I)**

1. தாட்டு வரிசைகளை இயற்றியவர் யார்? (1 புள்ளி)
2. தாட்டு வரிசைகள் பாடப்படும் இராகம் யாது? (2 புள்ளிகள்)
3. தாட்டு வரிசைகளின் தாளம் யாது? அங்கங்களைத் தருக? (2 புள்ளிகள்)
4. $I_4$ O $I_4$
ஸரிகரி / ஸரி / கம // என்ற தாட்டு வரிசையை ஸ்வர தாள அங்க அடையாளத்துடன் எழுதுக. (10 புள்ளிகள்)

(15 புள்ளிகள்)

**II)**

1. வெண்பா பாடப்படும் இராகம் எது? அதன் மேள எண் யாது? (1 புள்ளி)
2. கடபஜாதி சங்யைக்காக இதற்கு வழங்கப்படும் பெயர் யாது? (1 புள்ளி)
3. மேள சங்கேதம் யாது? கானகாலம் யாது? (1 புள்ளி)
4. இந்த இராகத்தின் நியாஸ ஸ்வரங்கள் எவை? (1 புள்ளி)
5. க்ரஹ ஸ்வரங்கள் எவை? (1 புள்ளி)
6. இதற்கு ஹிந்துஸ்தானி இசையில் வழங்கப்படும் பெயர் யாது? மேலைத்தேய இசையில் வழங்கப்படும் பெயர் யாது? (1 புள்ளி)
7. பண்ணிசையில் வழங்கப்படும் பெயர். (1 புள்ளி)
8. இந்த இராகத்தில் அமைந்த உருப்படி 2 தருக. (2 புள்ளிகள்)
9. இந்த இராகத்தின் ஆரோகண, அவரோகணம் தருக. (2 புள்ளிகள்)
10. இந்த இராகத்தில் ஸ்வரஸ்தானங்களைத் தருக (4 புள்ளிகள்)

(15 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

**III)**

i. ஸ்ருதி வாத்தியங்களில் மிகவும் சிறப்புப் பெற்ற தந்தி வாத்தியம் எது? (1 புள்ளி)

ii. குறித்த வாத்தியத்தின் படம் வரைந்து அதன் பாகங்களைக் குறித்துக் காட்டுக. (3 புள்ளி)

iii. அவ் வாத்தியம் செய்யப்படும் இடங்கள் 3 தருக. (3 புள்ளி)

iv. அதன் மறுபெயர் நான்கு தருக. (4 புள்ளி)

v. அவ் வாத்தியத்தின் தந்திகளின் மறு பெயர்களையும் அவை ஸ்ருதி கூட்டப்படும் முறையையும் தருக. (4 புள்ளி)

(15 புள்ளிகள்)

**IV)**

i. "ஆதிகுரு" , "சங்கீத பிதாமகர்" என்று போற்றப்படும் வாக்கேயகாரர் யார்? (1 புள்ளி)

ii. அவர் வாழ்ந்த காலப்பகுதி யாது? (1 புள்ளி)

iii. அவரின் இடம் யாது? (1 புள்ளி)

iv. அவரின் பெற்றோர் பெயர் யாது? (1 புள்ளி)

v. இளமைப் பெயர் யாது? (1 புள்ளி)

vi. இவர் எம் மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்? (1 புள்ளி)

vii. இவர் ஞானோதயம் பெற்றவுடன் பாடிய முதல் பாடல் எது? அதன் இராகம் யாது? (1 புள்ளி)

viii. இவரின் முத்திரை யாது? (2 புள்ளி)

ix. இவர் இயற்றிய பதங்களின் எண்ணிக்கையை எவ் உருப்படியிலிருந்து அறியலாம்? (2 புள்ளி)

x. இவரின் இசைத் தொண்டினைச் சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

(15 புள்ளிகள்)

**V)** பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்கி உதாரணங்கள் தருக.

1. ஜனக ராகம்
2. ஜன்னிய ராகம்
3. கும்மி
4. கோலாட்டம்

(3X5 = 15 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!